செ.வெ.எண்:37/ஜூன் நாள்: 17.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (17.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஏற்கனவே விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது. மேலும் வேளாண்மைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட வேளாண் தொடர்புடைய துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வேளாண்மைத் துறையின் சார்பாக 2015-2016 ஆம் ஆண்டில் அதிக மகசூல் கிடைக்கப்பெற்ற விவசாயிகளைப் பாராட்டி, பரிசுத் தொகைக்கான காசோலையினை வழங்கினார். முதல் பரிசாக ரூ.15,000/-க்கான காசோலையினை ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், ஆவரேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு.காந்தி என்பவருக்கும், இரண்டாம் பரிசாக ரூ.10,000/-க்கான காசோலையினை இராமநாதபுரம் வட்டம், களத்தாவூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. தமயந்தி என்பவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

விவசாயிகள் தங்கள் நிலத்தில் உள்ள மண்ணை பரிசோதனை செய்து மண்வள அட்டையில் உள்ள பரிந்துரைப்படி உரமிட வேண்டும். கோடையில் பெய்யும் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து நிலத்தை தயார் செய்ய வேண்டும். மாவட்டத்தில் 100 சதவீத மானியத்தில் பண்ணைக்குட்டை அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை அளிக்கலாம். 100 சதவீத மானியத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தில் உறைக்கிணறு அமைக்கப்பட்டு வருவதால் விருப்பமுள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் அளித்து பயன்பெறலாம். விவசாயிகள் தங்கள் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக்குட்டைகளில் மீன் குஞ்சுகள் வளர்க்க விருப்பப்பட்டால் சம்பந்தப்பட்ட மீன்வள உதவி இயக்குநர், இராமநாதபுரம் அலுவலகத்தில் விண்ணப்பங்களை அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) திரு.ஆர்.அரிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வி.எஸ்.வெள்ளைச்சாமி உட்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள் சங்கப்பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**